# DEPOSITION OF WITNESS
## (CHAPTER XXIII CODE OF PROCEDURE)
## IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| | |
|---|---|
| Name | சுப்பிரமணி |
| Father's Name | வெங்கடேசன் |
| Village | கல்லரைப்பட்டி |
| Taluk | வாணியம்பாடி |
| Calling | விவசாயம் |
| Age | 66 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **07.07.2025**

**EA.NO.04/2022 in EP. No. 24/2017 ம.சா.1**

**குறுக்கு விசாரணை (6ம் எதிர்மனுதாரர் தரப்பு) ( 3 முதல் 5 மற்றும் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது):-**

1. நானும் எதிர்மனுதாரர்களும் கல்லரைப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரர்கள் அனைவரையும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பச்சையப்பன் மனைவி மற்றும் பிள்ளைகளிடம் இருந்து என் தகப்பனார் சொத்தை வாங்கியதாக நான் இம்மனுவில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பச்சையப்பன் என்பவரின் தகப்பனார் பெயர் கிருஷ்ணகவுண்டர் என்றால் சரிதான்.

2. கிருஷ்ணகவுண்டருக்கு பச்சையப்ப கவுண்டர், குழந்தை கவுண்டர், துரைசாமி கவுண்டர் மற்றும் மாசிலாமணி என 4 பிள்ளைகள் என்றால் சரிதான். மேற்படி பச்சையப்ப கவுண்டர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி

பச்சயைப்ப கவுண்டர் மனைவி பெயர் சாலம்மாள் என்றால் சரிதான். மேற்படி பச்சையப்ப கவுண்டருக்கு சுலோச்சனா, உமாவதி, விநாயகம் மற்றும் கலைவாணி ஆகியோர்கள் தான் பிள்ளைகள் என்றால் சரிதான்.

3. என்னுடைய முதல் விசாரணையை நான் கூறியதன் பேரில் தான் வழக்கறிஞர் தயாரித்து தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி எனது முதல் விசாரணையில் 20.02.1992ம் தேதியில் பச்சையப்பன் வாரிசுகள் அனைவரும் என் தகப்பனாருக்கு மனு சொத்தை விற்க ஒப்பந்தம் போட்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 தான் அந்த ஒப்பந்தம் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தில் எனக்கு விநாயகம் ஒப்பந்தம் போட்டதாகத்தான் ஒப்பந்தத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்த ஆவணமானது நகல் தான் என்றால் சரிதான்.

4. நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ளதுபோல பச்சையப்பன் வாரிசுகளிடம் இருந்து எனது தகப்பனார் ஒப்பந்தம் போட்டதாக சொல்லப்படும் ஆவணம் ம.சா.ஆ.1 இல்லை என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தின் அசல் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த தேதி நினைவுள்ளதா என்றால் தோராயமாக 2 வருடங்களுக்கு முன்பு இறந்திருப்பார்.

5. எனது தகப்பனார் கிரையம் வாங்கியதாக கூறப்படும் சொத்தின் மீது எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கில் நான் எதேனும் மனுதாக்கல் செய்தேனா என்றால் இல்லை. மனு சொத்தினை 2004ல் சர்வேயர் மற்றும் நில அளவையர்கொண்டு அளந்து நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல்

செய்தபோதாவது ஏதேனும் ஆட்சேபனை மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

6. இம்மனு சம்மந்தமாக சொத்தை அளக்க 2004ல் வந்தபோது அது சம்மந்தமாக அந்த பாகப்பிரிவினை வழக்கில் என்னையும் ஒருத்தரப்பினராக சேர்க்க கோரியோ அல்லது பாகம்கோரியோ மனு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எனக்கு மனு சொத்தை விற்ற பச்சையப்பன் வாரிசுகளிடமாவது சென்று இவ்வாறு சொத்தை சுவாதீனம் எடுக்க வருகிறார்கள் என்றும் அதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கூறினேனா என்றால் கூறினேன், அதற்கு அவர்கள் என்னையே நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறு கூறினார்கள். அதன்பிறகாவது நான் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

7. மேற்படி சொத்தினை 2022–ல் சுவாதீனம் கொடுக்க வந்தபோது சுமார் 18 வருடங்கள் கழித்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இம்மனு சொத்தை நான் 04.06.1992–ல் வாங்குவதற்கு முன்பாகவே 30.04.1992ல் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த பச்சயப்பகவுண்டரின் வாரிசுகள் பெயரில் உள்ள கிரைய ஆவணம் எதுவும் நான் பார்த்து வாங்கவில்லை என்றால் சரியல்ல, பார்த்துதான் வாங்கினேன். மேற்படி நான் பார்த்து வாங்கிய ஆவணம் எது என்பதனை குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் தற்போது ஞாபகம் இல்லை.

8. மேற்படி பச்சயைப்ப கவுண்டரின் பெயரில் உள்ள அசல் பத்திரத்தையாவது என் தகப்பனார் வாங்கினாரா என்றால் ஞாபகம் இல்லை. என் தகப்பனார் வாங்கியதாக கூறப்படும் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன், என்னிடம் காட்டப்படும் ஆவணங்களான என் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.1 முதல் 8 வரையிலான ஆவணங்களில் நான் குறிப்பிட்டுள்ள ஆவணம் ஏதும் இல்லை என்றால் சரிதான்.

9. இம்மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள என் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் நகல் என்றாலும் அசல் ஆவணம் தாகக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரிதான். மேற்படி என் தகப்பனாரில் பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணமானது பச்சையப்பன் பெயரில் உள்ள அசல் ஆவணத்தை பார்க்காமல் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2-ன் ஆவணத்தின் 6ம் பக்கம் "**இதற்கு ஆதரவாக யாதொரு ரிகார்டும் கொடுக்கவில்லை**" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.1 ஆவணமான கிரைய ஒப்பந்தப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.1,76,500/- என்றால் சரிதான். ஆனால் என்னுடைய தகப்பனாரின் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தில் உள்ள தொகையானது ரூ.71,000/- என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணமான கிரைய ஒப்பந்தப்பத்திரமானது நானும் பச்சையப்பன் மகன் விநாயகமும் ஏற்படுத்திக்கொண்டது என்றால் சரிதான்.

11. 30.04.1992-ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் பின்னிட்டு 04.06.1992-ல் என் தகப்பனார் பச்சையப்பன் வாரிசுகளிடம் இருந்து சொத்தை கிரையம் பெற்றிருப்பது செல்லாது என்பதை அறிந்த காரணத்தினால் முன்தேதியிட்டு 20.02.1992 தேதியில் நானும் பச்சையப்பன் மகன் விநாயமும்

சேர்ந்து இந்த ம.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கும் பச்சையப்பன் வாரிசுகளுக்கும் நல்ல பேச்சுவார்த்தை இருப்பதால் அவர்களை வைத்து முன்னதாகவே பல மனுக்களை தாக்கல் செய்து, அது தள்ளபடி ஆகிவிட்ட காரணத்தினால் தற்போது நான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, பச்சையப்பன் வாரிசுகள் தாக்கல் செய்த மனுக்கள் பற்றி எனக்கு தெரியாது.

12. மேற்படி பச்சையப்பன் என்பவருக்கு சுலோச்சானா என்பவரும் வாரிசு தான் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 ஆவணமான எனது தகப்பனார் வாங்கிய கிரையப்பத்திரத்தில் சுலோச்சனா என்பவரை விட்டுவிட்டு தான் கிரையம் வாங்கிதாக உள்ளது என்றால் சரிதான். நீங்கள் அனைவரும் ஒரே கிராமத்ததை சேர்ந்தவர்கள் என்பதாலும் சொத்து சம்மந்தமாக மாசிலாமணி என்பவர் தாக்கல் செய்த வழக்கு எங்களுக்கு ஏற்கனவே தெரியவந்ததாலும் ம.சா.ஆ.1 தொகை அதிகமாக இருந்து நிலையில் ம.சா.ஆ.2 கிரையத்தொகை விலைக்குறைவு என்பதாலும் அதனை வாங்கிக்கொண்டோம் என்றால் சரியல்ல.

13. பச்சையப்பன் வாரிசுகளிடம் இருந்து மேற்படி சொத்தினை வாங்கியதற்கு மேற்படி வாரிசுகளை சாட்சியாக விசாரிக்கபோகிறேனா என்றால் இல்லை. மனுசொத்தில் வில்லங்கம் இருப்பது தெரிந்து தான் வாங்கினேன் என்றாலும் அதனால் தான் மேற்படி நபர்களை சாட்சியாக விசாரிக்க முன்வரவில்லை என்றால் சரியல்ல. மாசிலாமணி தொடர்ந்ந பாகவழக்கில் எனக்கு கிரையம் கொடுத்த பச்சையப்பன் வாரிசுகள் தொடுத்த மனுக்கள் அனைத்தும் தள்ளுபடி ஆனது என்றாலும், அதன்பிறகு தான் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதால் அந்த தீர்ப்பு என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல.

14. எனது தகப்பனார் பெற்ற கிரையமானது வழக்கிற்கு பின்னிட்டு பெறப்பட்டது என்பதனால் அது செல்லாது என்றால் சரியல்ல. ஆகையால் எனது தகப்பனார் எனக்கு கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணமும் செல்லாது என்றால் சரியல்ல. எனது தகப்பனாரோ அல்லது நானோ மனு சொத்தில் சுவாதீனத்தில் இருக்கிறோம் என்பதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

15. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.7,8 ரசீதானது இவ்வழக்கிற்கு சம்மந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.5 பட்டா ஆவணம் எனது தகப்பனார் பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான், மேற்படி ஆவணம் பட்டாவில் சர்வே எண்.490/1 கூட்டுரிமையில் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையில் என் தகப்பனார் கிரையம் வாங்கியிருந்தால் கூட்டுப்பட்டாவாக இல்லாமல் தனிப்பட்டாவாக வழங்கியிருப்பார்கள் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 ஆவணத்தில் இன்றைய தேதியளவிலும் பச்சையப்பன் பெயரில் தான் மனுசொத்திற்கான பட்டா எண்.418 உள்ளது என்றால் சரிதான்.

16. எனது தகப்பனாரும் பச்சையப்பன் வாரிசுகளும் கூட்டு சேர்ந்து பாக வழக்கில் இருந்து சொத்தை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் ஆவணம் ஏற்படுத்தியுள்ள காரணத்தினால் தான் இன்றைய தேதி வரையில் பட்டா பச்சையப்பன் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. எனது மற்றும் எனது தம்பி பெயரில் ஏற்படுத்திக்கொண்ட ஆவணத்தில் ம.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணத்தில்

உள்ள சர்வீஸ் கனெக்ஷன் எண்ணானது 73 என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதனை பின்னர் திருத்திவிட்டோம்.

17. மாசிலாமணி பச்சையப்பன் வாரிசுகள் பெயரிலும் மற்றும் துரைசாமி, குழந்தை கவுண்டர் ஆகியோர்கள் பெயரில் அ.வ.எண்.109/1992–யை பாகத்திற்காக திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் 30.04.1992–ல் தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் பச்சையப்பன் வாரிசுகள் அனைவரும் வழக்கில் ஆஜராகி இருந்தார்கள் என்றாலும் அவ்வழக்கில் எனது தகப்பனாருக்கு சொத்தை கிரையம் கொடுத்த விவரத்தினை குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பச்சையப்பன் வாரிசுகள் மனு சொத்தினை குறித்து திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 29.06.1992–ல் அ.வ.எண்.683/1992–யை உரிமை விளம்புகை பரிகாரத்திற்கு தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு வாணியம்பாடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.506/1995 என எண்ணாகி வழக்கு நடந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கிலும் சொத்தை என் தகப்பனாருக்கு கிரையம் கொடுத்த விவரத்தினை சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கினையும் பச்சையப்பன் வாரிசுகள் தொடுத்த வழக்கும் 15.09.1997–ல் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாசிலாமணி தொடுத்த பாகப்பிரிவினை வழக்கிலும் பச்சையப்பன் வாரிசுகள் ஆஜராகாமல் அவர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டு 06.01.1994–ல் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்பின்னிட்டும் மாசிலாமணி இறுதிநிலை தீர்ப்பாணைக்கு விண்ணப்பித்திருந்தார், அதிலும் அவர்கள் ஆஜராகியும் மேற்கொண்டு நடத்தவில்லை என்றும், அந்த இறுதிநிலை தீர்ப்பாணை மனுவின் பெயரில்

நீதிமன்ற ஆணையர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் உதவியுடன் மனு சொத்து உட்பட அனைத்து சொத்துக்களையும் அளந்து, கனம் நீதிமன்றத்தில் மாறுதல் செய்யப்பட்ட அ.வ.எண்.122/1996 உள்ள வழக்கில் அறிக்கை தாக்கல் செய்து, அந்த அறிக்கையின் பெயரில் 04.01.2005–ல் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணையை அனுசரித்து சொத்தில் சுவாதீனம் எடுக்கக்கோரி இந்த நிறைவேற்று மனுவினை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அதன்பிறகு மீண்டும் சொத்தை கனம் நீதிமன்றம் மூலம் அளக்க முற்பட்டபோது மீண்டும் பச்சையப்பன் வாரிசுகள் இறுதிநிலை தீர்ப்பாணை பிறக்கப்பட்டு 8 ஆண்டுகள் கழித்து முதல் நிலைதீர்ப்பாணையை ரத்து செய்யவும், இறுதிநிலை தீர்ப்பாணையை ரத்து செய்யவும் கால தாமதத்துடன் IA.No/604/2013 மற்றும் 605/2013 தாக்கல் செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 2 மனுக்களும் 03.11.2014–ல் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

18. இவை அனைத்தும் எங்களுக்கு கிரையம் கொடுத்த பச்சையப்பன் வாரிசுகள் மாசிலாமணி என்பவரின் பாகவழக்கில் சொத்தை ஏமாற்றும் நோக்கில் தான் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டதால் தற்போது என்னை வைத்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் வாங்கியுள்ள இம்மனு சொத்தில் மீது ஏதாவது நான் பரிகாரம் வேண்டும் என்றால் பச்சையப்பன் வாரிசுகளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் பெயரில் தான் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், மாசிலாமணிக்கோ, குழந்தைகவுண்ருக்கோ மற்றும் துரைசாமி வாரிசுகளுக்கோ ஒதுக்கப்பட்ட சொத்தில் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. துரைசாமி கவுண்டர்

வாரிசுகளும் தனியாக மனு தாக்கல் செய்து இறுதிநிலை தீர்ப்பாணை பெற்று சொத்தில் சுவாதீனத்திற்கு மனுதாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதேபோல் குழந்தை கவுண்டரும் தனியாக மனு தாக்கல் செய்து இறுதிநிலை தீர்ப்பாணை பெற்று சொத்தில் சுவாதீனத்திற்கு மனுதாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதனால் நான் தாக்கல் செய்துள்ள இந்தகோருரிமை மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்று என்றால் சரியல்ல. என் தகப்பனார்சொத்தை வாங்குவதற்கு முன்பு எந்த ஆவணத்தையும் சரிபார்க்கவில்லை என்றாலும், நல்லெண்ண அடிப்படையில் இந்த சொத்தை கிரையம் பெறவில்லை என்றாலும் சரியல்ல. ஆகையால் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| *ESHWAR VISWANATHAN* | *DISTRICT MUNSIF*<br>*Digitally signed by ESHWAR VISWANATHAN*<br>*Date: 2025.07.31 17:10:32 +0530* |

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வாணியம்பாடி.**